ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீலோககுரவே நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## பேயாழ்வார், பின்பழகிய பெருமாள் ஜீயர் வருஷதிருநட்சத்திரம் - ஐப்பசி – சதயம்



பேயாழ்வார், திருமயிலை



பேயாழ்வார், திருவல்லிக்கேணி



நம்பிள்ளை, ஸ்ரீரங்கம்
திருவடியில் பின்பழகிய பெருமாள் ஜீயர்

## பேயாழ்வார்

### தனியன்

துலா ஸதபிஷக் ஜாதம் மயூரபுரி கைரவாத் /
மஹாந்தம் மஹதாக் யாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்ஸஜம் //

த்ருஷ்ட்வா துஷ்டாவ யோ விஷ்ணும் ரமயா மயிலாதிபம் /
கூபே ரக்தோத்பலே ஜாதம் மஹதாஹ்வயமாஸ்ரயே //

இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் - மூன்றாம் திருவந்தாதி

வாழித்திருநாமம்

திருகண்டேனெனு நூறுஞ் செப்பினான் வாழியே
சிறந்த வைப்பசியிற் சதயம் செனித்த வள்ளல் வாழியே
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே
மலர்க்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவே யிடைகழியில் நின்றசெல்வன் வாழியே
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில்வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான் தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணை யிப்பெருநிலத்தில் வாழியே.

நாள்பாட்டு – உபதேசரத்தினமாலை 6, 7 பாசுரங்கள்

ஐப்பசியிலோண மவிட்டம்சதயமிவை
ஒப்பிலவா நாள்க ளுலகத்தீர் - எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்றுசிறப்பால்.

மற்றுள்ளவாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து
நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த - பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு
நின்ற துலகத்தே நிகழ்ந்து.

இராமாநுஜநூற்றந்தாதி - 10ஆம் பாசுரம்

மன்னிய பேரிருள் மாண்டபின். கோவலுள் மாமலராள்
தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும். தமிழ்த்தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கன்பு பூண்டவர் தாள்
சென்னியிற் சூடும். திருவுடை யாரென்றும் சீரியரே.

முதலாழ்வார்களும் திருமங்கையாழ்வாரும்

முதலார்வார்களைப்பற்றித் திருமங்கையாழ்வாரும் வெகு அழகாகப் பாசுரமிட்டிருக் கிறபடியை நம் பூருவாசாரியர்கள் நூட்பமாகக் காட்டியருளியே போந்தார்கள் என்பதை கீழெ அனுபவிப்போம். பெரியதிருமொழியில் திருக்கோவலூர் பதிகத்தில் நான்காவது பாசுரத்தில் ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந் தன்புகூருமடியவர்கட்கு ஆரமுத மானான் றன்னை (பெரிய திருமொழி 2ஆம் பத்து 10ஆம் திருமொழி 4ஆம் பாசுரம்) என்ற விடத்திற்கு ஆசார்யஹ்ருதயத்தில் காட்டியருளப்பட்ட பரமரஹ்யார்த்தம் இங்கு விவரிக்கலாகிறது. அதில் மூன்றாம் ப்ரகரணத்தில் மேகத்திற்கு ஸவாபதேசம் அருளிச்செய்ய பூண்டநாள் சீர்க்கடலை யுட்கொண்டு என்கிற சூர்ணையில் அன்புகூருமடியவர் என்றுள்ளதை வ்யாக்யானிதருளிய மணவாளமாமுனிகள் ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூருமடியவரான முதலாழ்வார்கள் என்று அருளிச்செய்து இருப்பது இங்கே குறிக்கொள்ளத்தக்கது. ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்நத அன்பு கூருமடியவரான முதலாழ்வார்கள் என்கிற பதம் திருமங்கையாழ்வாருடைய திருக்கோவலூர்ப்பதிகத்திலுள்ள தென்னுமிடம் மறக்கத்தக்கதன்று. அப்படிப்பட்ட அடியவர்கட்கு அமுதமாக இருந்தவன் திருக்கோவலூர் எம்பெருமான் என்று துதியுள்ளது. அங்கு அடியவர்கள் என்றது முதலாழ்வார்களை என்று நம் பூருவாசாரியகள் ஒருமிடறாகத் திருவுள்ளம் பற்றியிருந்தார்களென்னுமிடம் மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்தினால்

தெற்றென விளங்குகின்றது. இதில் அடியவர் என்பது பேயாழ்வாரைக்குறிக்கும். இவர் திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்ற முதற்பாசுரத்தில் எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைத்தாம் காணப்பெற்றதாகப் பேசினார். அந்த திவ்யமங்கள விக்ரஹத்துள் திருவடி ஒன்றே தமக்கு உத்தேஸ்யம் என்பதைத் தமது திருவந்தாதியில் ஆதி மத்ய அவஸாநங்களில் வெகு அழகாகக் காட்டினார். இங்ஙனம் எம்பெருமானது அடியையே சிக்கெனப் பற்றினவர் என்ற காரணத்தினால் பேயாழ்வார் அடியவராகக் கூறப்பட்டார். அன்புகூருமடியவர் என்றது பூதத்தாழ்வாரை குறிக்கும். எங்ஙனேயென்னில், அன்புகூரும் என்றது அன்பு மிகுந்தவர் என்றபடி. இவ்வாழ்வார் அன்பே தகளியா என்று தொடங்கி விளவின் காய்கன்றினால் வீழ்த்தவனே ! என்றனளவன்றால் யானுடைய அன்பு என்று முடிவு பாசுரத்தில் தமது அன்பு மிகுதியை வாய்விட்டுரைத் தவராதலால் அன்பு கூருமடியவராக இவரே கருதத் தகுதியுடையவராவர். அரும்பிக் கண்ணீர் சோருமடியவர் பொய்கையாழ்வார். எங்ஙனே என்னில் இவ்வாழ்வார் பழுதே பலபகலும் போயின வென்று அஞ்சியழுதேன் என்று தம்வாக்கினாலே பேசியருளினபடி அரும்பிக் கண்ணீர் சோர்ந்திருப்பவராதலால். ஆக இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரையும் அழகாகக் குறிப்பிட்டு இவர்க்கு அமுதமாயிருந்தவன் அத்தலத்து நாதன் என்று கலியன் அருளிச்செய்தார். முதலாழ்வாரின் திருநாமங்களை ஸ்பஷ்டமாகப் பேசிப் பாசுரம் பாடியிருத்தல் ஆகாதோ என்று சிலர் சந்தேகிப்பர்கள். வெளிப்படையாகக் கூறுவதைக்காட்டிலும் இவ்வகையாகக் கூறவதே ரஸமாக இருக்கும். நுட்மாகக் கண்டறிய வேண்டும்படி பேசுவது நம் பூர்வர்களின் ஆழ்ந்த அறிவையும் பக்தியின் கனத்தையும் காட்டுகிறது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் விந்தை மேய கற்புடைய மடக்கன்னியையும், பல்லவன், வில்லவன், வயிரமேகன், செங்கணான் கோச்சோழன் முதலானவர்களையும் வாய்விட்டுப் பேசினது அந்த வ்யக்திகள் திறத்தில் விசேஷ ப்ரதிபத்தி இல்லாமையே ஆகும்.
(மேலே குறிப்பிட்ட விஷயங்கள் காஞ்சீ ஸ்வாமி அருளியுள்ள முதலாவார்களைப் பற்றிய விசேஷார்த்தம் என்கிற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது)

பொய்கையாழ்வார் வையம் தகளியா என்று தொடங்கி லீலா விபூதியையும் செய்ய சுடராழியான் என்று நித்ய விபூதியையும் அநுஸிந்திதுக்கொண்டு ப்ரபந்தத்தைத் தொடங்குகையாலே உபயவிபூதிகளோடும் கூடியவன் பரம்பொருள் என்று நிலைநாட்டினார். பூதத்தாழ்வார் ஞானச்சுடர் விளக்கேத்தினேன் நாரணற்கு என்று தொடங்குகையாலே அப்பரம்பொருள் நாராயணனே என்று நிலைநாட்டினார். பேயாழ்வார் திருக்கண்டேன் என்று தொடங்கி லசஷ்மி ஸம்பந்தத்தைக் காட்டி பரதத்த்வ திர்ணயம் செய்தார்.

<u>பின்பழகிய பெருமாள் ஜீயர்</u>

<u>தனியன்</u>

துலா ஸதபிஷக் ஜாதம் ஸ்ரீலோகார்ய பதாஸ்ரீதம் /
ஜ்ஞாநாதி பூஷணம் வந்தே பஸ்சாத் ஸுந்தர தேஸிகம் //

நாள்பாட்டு – உபதேசரத்தினமாலை 66 பாசுரம்

பின்பழகராம்பெருமாள் சீயர். பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கவாசையினால் - நம்பிள்ளைக்
கானவடிமைகள்செய் யந்நிலையை நன்னெஞ்சே
ஊனமற வெப்பொழுதுமோர்.

இவர் செய்தருளின க்ரந்தம் - வார்த்தாமாலை

நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்து வாழ்ந்தவர்கள் பலர் இருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர் என்னும் சிஷ்யர்க்கு இருந்த ஆசார்யப்ரேமம் ஒப்புயர் வற்றது. நம்பிள்ளையிடம் நித்யகைங்கர்யம் செய்யபெறவேணுமென்றே இவர் சில ஔஷதங்களை ஸ்வீகரித்துத் திருமேனியைப் போஷிக்க விருப்பங்கொடிருந்தார் என்பது வைபவ நூலில் விசதம். இவரைப்போல் நம்மால் இருக்கமுடியாமல் போனாலும் இவருடைய நிஷ்டையைச் சிந்தனை செய்தாலே போதுமானது.

பின்பழகிய பெருமாள் ஜீயரும் நடுவில் திருவீதி பட்டரும்

பட்டருடைய குமாரர் நடுவில் திருவீதி பட்டர் குலப் பெருமையினால் கொஞ்சம் பொறாமைக்குணம் உடையவர். அரசனின் ஆஸ்தானத்திற்கு போகும்போது நம்பிள்ளை சீடரான பின்பழகிய பெருமாள் ஜீயரை கூடவே அழைத்துச் சென்றார். அரசன் நடுவில் திருவீதி பட்டரை ஒரு கேள்வி கேட்டான். அதாவது சக்ரவர்த்தி திருமகன் தன்னை `ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்று சொல்லிக் கொண்டான். அப்படியிருக்க ஜடாயுவுக்கு மோஷம் கொடுத்தான் என்று எப்படி சொல்லமுடியும். இதற்கு நடுவில் திருவீதி பட்டருக்கு சரியான பதில் புலப்படவில்லை. அதனால் பின்பழகிய பெருமாள் ஜீயரைப் பார்த்தார். அவர் அதற்கு நம்பிள்ளை `ஸத்யேந லோகாந் ஜயதி' என்று நிர்வஹிப்பார் என்று சுருக்கமாக கோடிட்டுக் காட்டினார். உடன் சம்ந்தப்பட்ட ஸ்லோகத்தை ஞாபகப்படுத்தி அரசனுக்கு விளக்கத்தை சொன்னார். அரசன் கொடுத்த விலை உயர்ந்த பரிசுகளை பட்டர் நம்பிள்ளையின் திருவடிகளிலே சமர்பித்து தன்னுடைய பொறாமை குணத்தைப் போக்கிய அவருடைய திவ்ய சூக்திகளின் பெருமையை அறியாமல் இருந்ததற்காக மன்னிப்புக் கோரினார். நம்பிள்ளையும் அவரை அங்கீகரித்து தன் பக்கத்திலேயே வைத்துக்கொண்டார். ஆசார்ய அபிமானமே உத்தாரகம்.

பேயாழ்வார், பின்பழகிய பெருமாள் ஜீயர் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: